வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
Term Examination, November - 2017
FWC

| தரம் :- 12 (2019) | இந்துநாகரிகம் | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி - I

- **பகுதி I வினாத்தாள் 25 வினாக்களைக் கொண்டது அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

(1) "திரயீ வித்யா" எனப்படுவது
1) இருக்கு, யசுர், சாமம் 2) இருக்கு, யசுர், அதர்வணம் 3) நியமம், ஆசனம், பிராப்தி
4) சர்க்கம், விருத்தி, வம்சம் 5) வேதம், ஆகமம், புராணம்

(2) உபாகமங்கள் எத்தனை
1) 108 2) 1008 3) 28 4) 207 5) 18

(3) சிவ பரத்துவத்துடன் தொடர்புடைய கதை
1) பாகவத புராண அவதாரம் 2) மகிடாசுரனை அழித்தது 3) மார்கண்டேயர் கதை
4) பிரகலாதன் கதை 5) அடி முடி தேடிய கதை

(4) அரச நீதி பற்றிக் கூறும் தரும சாத்திர காண்டம்
1) ஆசார காண்டம் 2) வியபகார காண்டம் 3) பிராயச்சித்த காண்டம்
4) யுத்த காண்டம் 5) உற்பத்திக் காண்டம்

(5) பிராமணிய வழிபாட்டையும் நாட்டார் வழிபாட்டையும் இணைத்துக் கூறுவது
1) திருமுருகாற்றுப்படை 2) திருக்குறள் 3) திருமந்திரம்
4) பெரியபுராணம் 5) பரிபாடல்

(6) சோழ அரசர்களது சின்னமாக கொள்ளப்பட்டது
1) கருடன் 2) நந்தி 3) நடராசர் 4) புலி 5) மயில்

(7) ஐந்தாம் வேதம் என அழைக்கப்படுவது
1) இராமாயணம் 2) அதர்வ வேதம் 3) திருமந்திரம்
4) மகாபாரதம் 5) அர்த்த சாஸ்த்திரம்

(8) ஈழத்தில் பாடல் பெற்ற முருகன் ஆலயம்
1) நல்லூர் 2) செல்வச் சந்நிதி முருகன் ஆலயம் 3) கதிர்காமம்
4) இணுவில் கந்தசாமி கோயில் 5) திருக்கேதீஸ்வரம்

(9) சங்கீர்ணஜாதி, குணபரன் என்னும் விருதுப் பெயர் கொண்ட மன்னன்
1) நந்தி வர்மன் 2) நரசின்ம வர்மன் 3) சிம்ம வர்மன்
4) மகேந்திர வர்மன் 5) இராஜசிம்மன்

(10) பிரபஞ்ச உற்பத்தி, பிரபஞ்சப் படைப்புக்கு முற்பட்ட நிலை பற்றிக் குறிப்பிடும் வேத சூக்தம்
1) யமசூக்தம் 2) நாஸதீய சூக்தம் 3) வருண சூக்தம்
4) புருசூக்தம் 5) முனி சூக்தம்

(11) சைவமரபில் கோயில் என அழைக்கப்படும் தலம்
1) காஞ்சி 2) மதுரை 3) சிதம்பரம் 4) திருவாரூர் 5) திருவையாறு

(12) "பிராமணர்களை அவனியில் நடமாடும் தெய்வங்கள்" என குறிப்பிடும் பிராமணம்

1) கோபதம் 2) தைத்திரியம் 3) கௌஷீதம் 4) ஐதரேயம் 5) சதபதம்

(13) சோழர் காலத்தில் பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட குடியிருப்பு

1) பாணர் குடியிருப்பு 2) திருமுக்கூடல் 3) கிருஷ்ண மங்கலம்
4) சதுர்வேதி மங்கலம் 5) கடிகைத்தானம்

(14) திரிவர்க்கம் எனப்படுவது

1) பதி, பசு, பாசம் 2) ஆணவம், கன்மம், மாயை 3) மனம், வாக்கு, காயம்
4) சூரியன், சந்திரன், அக்கினி 5) அறம், பொருள், இன்பம்

(15) இராமாயணத்தில் உள்ள காண்டங்களின் எண்ணிக்கை

1) 13 2) 10 3) 18 4) 7 5) 28

✦ இலக்கம் 16 தொடக்கம் 19 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுடன் பொருத்தமானவற்றை தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| A<br>யசுர் | B<br>சர்க்கம் | C<br>வணிகம் | D<br>உற்சவம் |
| E<br>வைசியர் | F<br>சதருத்திரியம் | G<br>கர்ஷணம் | H<br>வம்சம் |

(16) இறைவனுக்கு பல பெயர் சொல்லி வழிபடும் மரபுக்கு காரணமாக அமையும் தொகுதி

1) A, F 2) A, B 3) B, F 4) H, E 5) F, A

(17) பஞ்ச லட்சணத்தோடு தொடர்புடைய தொகுதி

1) B, F 2) G, H 3) H, D 4) C, B 5) B, H

(18) வருணத்தவர்களுக்குரிய ஒழுக்கத்தோடு தொடர்புபட்ட தொகுதி

1) A, H 2) E, C 3) F, B 4) C, D 5) F, G

(19) ஆகமத்தோடு தொடர்புடைய தொகுதி

1) A, G 2) G, B 3) G, D 4) G, H 5) H, F

(20) மங்களாசனம் பெற்ற திவ்ய தேசங்களின் உருவாக்கத்திற்கு அடித்தளமிட்டவர்கள்

1) நாயன்மார்கள் 2) ஆழ்வார்கள் 3) சோழர்கள் 4) பாண்டியர்கள் 5) பல்லவர்கள்

(21) திருமுறைகளை அருளியோர் எத்தனை பேர்

1) 26 2) 28 3) 63 4) 27 5) 09

(22) ஆகமங்களில் அதிகமான சைவ சித்தாந்த கருத்துக்களை கொண்ட பாதங்கள்

1) சரியை பாதம், யோகம் பாதம் 2) யோகம் பாதம், கிரியாபாதம்
3) ஞானபாதம், கிரியாபாதம் 4) சரியாபாதம், ஞானபாதம்
5) யோகபாதம், ஞானாபாதம்

(23) வானவன் மாதேவீஸ்வரத்தின் மறு பெயர்

1) 5ம் சிவாலயம் 2) திருக்கோணேஸ்வரம் 3) 2ம் சிவாலயம்
4) தேநுவர விஷ்ணு ஆலயம் 5) முன்னேஸ்வரம்

(24) திருப்பல்லாண்டு பாடியவர்கள்

1) பெரியாழ்வார், சேந்தனார் 2) சேந்தனார், பரணதேவர் 3) நம்மாழ்வார், சேந்தனார்
4) சேந்தனார், கபிலதேவர் 5) கபிலதேவர், பரணதேவர்

(25) கர்ப்பக்கிரகத்திற்கு மேல் விசேடமாக அளந்து அமைக்கப்படுவது

1) பிரகாரம் 2) மூலஸ்தானம் 3) கோபுரம்
4) பலிபீடம் 5) விமானம்

**(25 x 2 =50 புள்ளிகள்)**



The National e-learning Portal for The General Education

## பகுதி - II

**பகுதி "அ" பகுதி "ஆ" ஆகிய இரு பகுதிகளிலிருந்தும் குறைந்தது இவ்விரு வினாக்களையேனும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

### பகுதி - அ

(1) இந்து நாகரிகத்தின் முதல் நூல் என்ற வகையில் வேதங்கள் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.

அ) வேதங்களின் வகையும் அமைப்பும் ஆ) வழிபாட்டு முறைகள்

(5 + 5 = 10 புள்ளிகள்)

(2) இந்து சமுதாயத்தில் மகாபாரதம் ஏற்படுத்திய செல்வாக்கினை மேல்வரும் விடயங்களில் ஆராய்க.

அ) சமயநெறிகள் ஆ) இலக்கிய மரபு (5 + 5 = 10 புள்ளிகள்)

(3) "தென்னக வரலாற்றில் சோழர் காலம் பொற்காலமாகும்" இக்கூற்றுக்கு அமைய மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.

அ) அரசர்களின் பங்களிப்பு ஆ) சைவ வைணவ இலக்கியங்கள்

(5 + 5 = 10 புள்ளிகள்)

### பகுதி - ஆ

(4) இந்துக்களை உலகறியச் செய்தது அவர்களின் பண்பாடும் நாகரிகமும் ஆகும். இதற்கமைய மேல்வரும் அம்சங்களை விளக்கி கூறுக.

அ) நாகரிகம், பண்பாடு என்பவற்றினை விளக்குக. இரண்டுக்குமிடையிலான தொடர்புகளையும் தருக.

ஆ) இந்து நாகரிகத்தின் சிறப்புக்களை குறிப்பிடுக. (4 + 6 = 10 புள்ளிகள்)

(5) இந்து நாகதிக வாளர்ச்சியில் மகாபுராணங்கள் கொண்டுள்ள முக்கியத்துவத்தை மேல் வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக.

அ) பிற்காலச் சமய மரபுகளில் செலுத்திய செல்வாக்கு

ஆ) முக்கியத்துவம் (4+ 6 = 10 புள்ளிகள்)

(6) "இந்து சமய சீர்திருத்த இயக்கங்களில் ஒன்றாகிய பிரம சமாஜம் சமூக மேம்பாட்டிற்கென முற்றிலும் அர்ப்பணித்துக் கொண்ட இயக்கமாகும்" இக் கூற்றினைக் கருத்திற் கொண்டு மேல்வரும் தலைப்புகளில் அதன் பணிகளை மதிப்பிடுக.

அ) இராஜாராம் மோகன்ராய் வாழ்ந்த காலம் ஆ) பிரம சமாஜத்தின் முக்கிய பணிகள்

இ) ஏற்படுத்திய சமூக மேம்பாடு (4 + 10+ 6 = 20 புள்ளிகள்)

(6) சிந்துவெளி காலச் சமய நிலை பற்றி ஆராய்க.

( 10 புள்ளிகள்)

(7) “வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்”

அ) ஆகமம் என்பதன் பொருள் விளக்கமும் வகைகளும்

ஆ) ஆகமத்தின் உப பிரிவுகளை விளக்குக. (4+ 6 = 10 புள்ளிகள்)

(8) மேல்வருவனவற்றுள் எவையேனும் நான்கு பற்றி சுருக்கமாகக் குறிப்புகள் எழுதுக.

அ) வருணன்

ஆ) திருக்கேதீஸ்வரம்

இ) திருக்கோயில் வழிபாடு

ஈ) புராணங்கள் கூறும் சமயக் கருத்துக்கள்

உ) சங்க கால சமயநிலை

ஊ) பல்லவர் காலத்தில் பக்தி இயக்கம் ( + $2\frac{1}{2}$ + $2\frac{1}{2}$ + $2\frac{1}{2}$ = 10 புள்ளிகள்)

$2\frac{1}{2}$

The National e-learning Portal for The General Education